
**ஏப்ரல் – 04**

# TNPSC துளிகள்

- வட இந்தியாவின் முதல் அரசு ஹோமியோபதி கல்லூரியானது ஜம்மு காஷ்மீரின் கத்வா மாவட்டத்தில் உள்ள ஜஸ்ரோட்டா பகுதியில் நிறுவப்படவுள்ளது.
- அந்தமான் & நிக்கோபர் படைப் பிரிவானது, தனது முதலாவது அனைத்து மகளிர் கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கையினை INS உட்கோர்ஷ் என்ற கடற்படை விமான நிலையத்தில் மேற்கொண்டது.
    - இந்த நடவடிக்கையானது, படைத்தளபதி சுபாங்கி ஸ்வரூப், துணைப் படைத் தளபதி திவ்யா சர்மா மற்றும் துணைப் படைத்தளபதி வைஷாலி மிஸ்ரா ஆகிய கடற்படை அதிகாரிகள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியக் கடற்படையின் INS டிர் கப்பலானது, செய்ஷல்சில் நடைபெற்ற கட்லாஸ் எக்ஸ்பிரஸ் - 2024 என்ற பயிற்சியில் பங்கேற்றது.
- டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனமானது, சத்தீஸ்கரில் உள்ள ராஜ்நந்த்கான் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு வரும் இந்தியாவின் மிகப்பெரிய சூரிய சக்தி மற்றும் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) மையத்தின் பணிகளை நிறைவு செய்துள்ளது.
    - இது 100 மெகாவாட் சூரியசக்தி ஒளி மின்னழுத்த தொழில்நுட்பம் சார்ந்த மின் உற்பத்தி நிலையம் மற்றும் சுமார் 120 மெகாவாட் திறன் கொண்ட பயன்பாட்டு அளவிலான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நீர் சுத்திகரிப்பு அமைப்புத் தொடர்பான (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகள், 2023




- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது, 2023 ஆம் ஆண்டிற்கான நீர் சுத்திகரிப்பு அமைப்புத் தொடர்பான (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கழிவு நீர் மற்றும் இந்தச் சுத்திகரிப்பு அமைப்புகளில் உருவாக்கப்படும் கழிவுப்

பொருட்களை மேலாண்மை செய்தல், சேமித்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான வழி காட்டுதல்களை இது வழங்குகிறது.

- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்த விதிகளானது அமலுக்கு வர உள்ளது.

## 'சாகர் அங்காளன்' வழிகாட்டுதல்கள்


- மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகமானது, 'சாகர் அங்காளன்' வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது இந்திய துறைமுகங்களின் செயல்திறனை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளதோடு, வரைபடமாக்கல், தரநிலைப்படுத்துதல் மற்றும் உலகளாவியத் தரநிலைகளோடு இசைந்து அமைதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய போட்டித் தன்மைக்கு ஏதுவாக இந்தியாவின் கடல்சார் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும் மேம்படுத்தச் செய்வதற்குமான அரசாங்கத்தின் ஒரு ஈடுபாட்டினை இந்த நடவடிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.




## GROW இணைய தளம் மற்றும் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, வேளாண் காடு வளர்ப்பு மூலம் தரிசு நிலத்தை பசுமை மயமாக்குதல் மற்றும் புணரமைத்தல் (GROW) அறிக்கை மற்றும் இணைய தளத்தினை சமீபத்தில் தொடங்கியுள்ளது.
- தேசிய அளவிலான முன்னுரிமைக்காக கருப்பொருள் சார்ந்த தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தி வேளாண் காடு வளர்ப்பு ஏற்புநிலைக் குறியீடானது (ASI) உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, பசுமைமயமாக்கல் மற்றும் புணரமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசுத் துறைகள் மற்றும் தொழிற்துறைகளுக்கு உதவும் வகையில் மாநிலம் மற்றும் மாவட்ட வாரியான பகுப்பாய்வுகளை வழங்குகிறது.
- "வேளாண் காடு வளர்ப்பு மூலம் தரிசு நிலத்தைப் பசுமைமயமாக்குதல் மற்றும் புணரமைத்தல் (GROW) என்ற இணைய தளமானது மாநில மற்றும் மாவட்ட அளவிலான தரவுகளுக்கான பொதுப் பயன்பாட்டு அணுகலை வழங்குகிறது.
- GROW முன்னெடுப்பானது நாட்டின் உறுதிப்பாடுகளுடன் ஒத்துப் போகிறது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 26 மில்லியன் ஹெக்டேர் அளவிலான தரமிழந்த நிலத்தினை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2.5 முதல் 3 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு இணையான கூடுதல் கார்பன் உள்ளீர்ப்பு அமைப்புகளை (காடுகள்) உருவாக்குதல்.




## 'SARTHI' இணைய தளம்





- விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களைச் சென்றடையும் வகையில் காப்பீட்டு நிறுவனங்களுக்கு நன்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட 'SARTHI' என்ற இணைய தளத்தினை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- இது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) உள்ளிட்ட அரசாங்கத்தின் மானியத்துடன் கூடிய காப்பீட்டுத் திட்டங்களையும், அதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்ட திட்டங்களையும் வழங்குகிறது.
- 'SARTHI' என்பது வேளாண்மை, கிராமப்புறப் பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் காப்பீடு ஆகியவற்றிற்கான சோதனை தளம் என்பதைக் குறிக்கிறது.
- காப்பீட்டுத் திட்டம் சார்ந்தத் தயாரிப்புகளைக் கண்டறிவதற்கும், வாங்குவதற்கும், பெறுவதற்குமான ஒற்றைச் சாளரத் தளமாக இந்த இணைய தளம் விளங்கும்.
- PMFBY திட்டத்தின் கீழான குறை தீர்ப்பு நெறிமுறையை வலுப்படுத்தும் வகையில்,

விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்காக 14447 என்ற உதவி எண்ணையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## SWATI இணைய தளம்


- மத்திய அரசானது, SWATI (பெண்களுக்கான அறிவியல் - தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்) என்ற இணைய தளத்தினை தொடங்கியுள்ளது.
- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) மற்றும் மருத்துவத் துறைகளில் இந்தியப் பெண்களின் சாதனைகளை எடுத்துரைக்கும் தரவு தளத்தைக் கொண்டுள்ளது.
- அறிவியல் துறையில் உள்ள பாலின இடைவெளியை நிவர்த்தி செய்வதற்காக தேசிய தாவர மரபணு ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NIPGR) இந்த ஊடாடும் வகையிலான இணைய தளமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த இணைய தளமானது, அறிவியலில் கல்வித் துறை மற்றும் தொழில்துறைகளில் ஈடுபடுவதற்குப் பெண்களை ஊக்குவிக்க முயல்கிறது.




## இந்தியாவின் தொலைதூரக் கிராமங்களில் APAAR

- கல்வி அமைச்சகமானது, பொதுச் சேவை மையங்கள் (CSCs) மூலம் கிராமப்புறங்களில் தானியங்கு நிரந்தர கல்விக் கணக்கு பதிவேட்டை (APAAR) சமீபத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.
- APAAR திட்டமானது தேசிய கல்விக் கொள்கையின் (NEP 2020) ஒரு பகுதியாக கருத்தாக்கப் பட்டுள்ளது.
- கல்லூரி / பல்கலைக் கழகத்தில் பயிலும் அனைத்து மாணவர்களும் கல்விநிலை தொடர்பான தரவுகளை (Academic Bank of Credits) பதிவு செய்வதை இது கட்டாயம் ஆக்குகிறது.
- கல்வி நிலை தொடர்பான தரவுகள் என்பது எண்ணிமச் சேமிப்பகம் போன்றது என்ற நிலையில் இதன் மூலம் மாணவர்கள் அதன் பலன்களைப் பெறலாம்.
- இந்த எண்ணிமத் தரவு உள்ளீட்டு சேமிப்பகத்தில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் / தரவரிசை அனைத்தும் சேமிக்கப்படும்.
- மாணவர்களின் தனிப்பட்ட தகவல்களும் இங்கு சேமிக்கப்படும்.

- இந்த APAAR அடையாள எண்ணினைக் குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தலாம்.
- மாணவர்கள் இனி எந்த இடத்திலும் சான்றிதழ்களை வழங்கத் தேவையில்லை என்ற நிலையில் வெறும் APAAR அடையாள எண்ணினை மட்டும் கொடுத்தால் போதுமானது.




## சட்ட ஆணையத்தின் 287வது அறிக்கை

Cabinet Decision
February 13, 2019

**Introduction of Registration of Marriage of NRI Bill 2019**

The Union Cabinet has approved the introduction of Registration of Marriage of Non-Resident Indian (NRI) Bill, 2019, for creating more accountability and offering more protection against exploitation of Indian citizens, mostly women by their NRI spouses.

**Details:**

- The Bill provides for amendment of the legal framework to act as a deterrent to the erring NRI spouses and creating more accountability and offer protection against exploitation of Indian Citizens married to NRIs.
- Once the Bill is passed, marriages performed by NRIs would be registered in India or Indian Missions & Posts abroad, and necessary changes would be carried out in the:
- Passports Act, 1967; and
- Code of Criminal Procedure 1973 by insertion of Section 86A.

**Major Impact:**

- Serving Judicial summons for Court proceedings in India is a major problem, which would be taken care of by this Bill by amending the Code of Criminal Procedure, 1973. Thus, the Bill would offer great protection to Indian citizens married to NRIs and serve as a deterrent to NRIs against harassment of their spouses.

- வெளிநாடு வாழ் இந்தியர்கள்/வெளிநாட்டில் உள்ள இந்திய குடிமக்கள் மற்றும் இந்திய குடிமக்கள் ஆகியோருக்கு இடையேயான திருமணத்தைக் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்று இந்தியச் சட்ட ஆணையமானது அதன் 287வது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.
- நிலுவையிலுள்ள 2019 ஆம் ஆண்டு வெளிநாடு வாழ் இந்தியர்களின் திருமணப் பதிவு மசோதாவினை (NRI மசோதா) திருத்தியமைப்பதன் மூலம் இந்த மாற்றங்களை மேற் கொள்ள இந்த அறிக்கை முன்மொழிகிறது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுடனான திருமணங்களைப் பதிவு செய்வதற்கான புதிய நடைமுறையையும் இந்த அறிக்கையானது பரிந்துரைக்கிறது.

- மாவட்ட திருமண அதிகாரிகளுக்கு அறிவிப்பு வழங்குவதும், திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் நபர்களுக்கு அதற்கான வாய்ப்பினை வழங்குவதற்காக இந்தத் திருமணம் குறித்த தகவல்களை 30 நாட்களுக்குக் காட்சிப்படுத்த வேண்டுமென்ற சில நடைமுறைகளும் இதில் அடங்கும்.
- 2019 ஆம் ஆண்டு வெளிநாடுவாழ் இந்தியர்கள் மசோதாவின் விரிவாக்கத்துடன், ஒரு நபரின் கடவுச்சீட்டில் அவர்களின் திருமண நிலையைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக, 1967 ஆம் ஆண்டு கடவுச் சீட்டு சட்டத்திலும் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென சட்ட ஆணையமானது பரிந்துரைக்கிறது.

## இந்தியாவில் வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை





- இந்தியா ஹேட் லேப் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக 668 ஆவணப்படுத்தப்பட்ட வெறுப்பு பேச்சு நிகழ்வுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- ‘இந்தியாவில் வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு நிகழ்வுகள்’ என்ற தலைப்பிலான அறிக்கையில், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மட்டும் 255 நிகழ்வுகள் பதிவு செய்யப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்த எண்ணிக்கையானது 413 ஆக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது 62% அதிகரிப்பாகும்.
- இதில் 75% நிகழ்வுகளானது (498) பா.ஜ.க ஆளும் மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் டெல்லியில் பதிவாகியுள்ளன.
- 36% (239) நிகழ்வுகள் "முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் நேரடிப் பேச்சுகளை உள்ளடக்கியது".
- 63% (420) நிகழ்வுகளில் " சதி கோட்பாடுகள், முதன்மையாக லவ் ஜிஹாத், நில ஜிஹாத், ஹலால் ஜிஹாத் மற்றும் மக்கள் தொகை ஜிஹாத்" பற்றிய பேச்சுகளும் அடங்கும்.
- சுமார் 25% (169) வெறுப்புப் பேச்சுக்களானது முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களைக் குறி

வைத்து பேசப்பட்ட நிகழ்வுகளாகும்.

- மகாராஷ்டிரா (118), உத்தரப் பிரதேசம் (104), மத்தியப் பிரதேசம் (65), ராஜஸ்தான் (64), ஹரியானா (48), உத்தரக்காண்ட் (41), கர்நாடகா (40), குஜராத் (31), சத்தீஸ்கர் (21), மற்றும் பீகார் (18) ஆகியவை மிகவும் அதிக எண்ணிக்கையிலான வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் பதிவான முதல் 10 மாநிலங்கள் ஆகும்.

## பெருந்தொற்று திட்டம் மற்றும் சீர்தரச் செயல்பாட்டு முறைமை





- 286வது சட்ட ஆணைய அறிக்கையானது, எதிர்காலத்தில் ஏற்படும் பல்வேறு பெருந் தொற்றுகளை எதிர்கொள்வதற்காக ஒரு பெருந்தொற்றுத் திட்டம் மற்றும் சீர்தரச் செயல்பாட்டு முறைமையினை உருவாக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.
- இது 1897 ஆம் ஆண்டு பெருந்தொற்றுச் சட்டத்தின் (EDA) வரம்புகளை இது எடுத்து உரைக்கிறது.
- "பெருந்தொற்றுகளின் மேலாண்மை, கட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஆகியவற்றை ஒரு நூற்றாண்டுக்கும் மேலான பழமையானச் சட்டத்தின் மூலம் நிர்வகிக்க முடியாது" என்று அந்த அறிக்கையானது எடுத்துரைக்கிறது.
- பெருந்தொற்று ஏற்படும் போது மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளின் அதிகாரங்களுக்கு இடையே தெளிவான வரையறை நிர்ணயிக்கப்படவில்லை என்ற நிலையில் இது ஒருங்கிணைக்கப்படாத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கிறது.
- ஒரு சீர்தரச் செயல்பாட்டு முறைமை (SOP) உருவாக்கப்பட்டால், பொது சுகாதார அவசர நிலையின் போது முன் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பங்களிப்புகளுடன் எந்தவொரு பெருந்தொற்றிற்கும் சரியான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்ய முடியும்.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச ஒளி மாசு வழிகாட்டுதல்கள்

- புலம்பெயர்ந்த உயிரினங்கள் மற்றும் காட்டு விலங்குகளின் வளங்காப்பு மீதான மாநாட்டு அமைப்பானது (CMS) புலம்பெயர்ந்த இனங்களுக்கான சர்வதேச ஒளி மாசு வழிகாட்டுதல்களைத் தயாரித்துள்ளது.
- இயற்கையான இருளானது சுத்தமான நீர், காற்று மற்றும் மண்ணுக்குச் சமமான வளங் காப்பு மதிப்பைக் கொண்டுள்ளது என்று CMS அமைப்பின் 14வது பங்குதாரர்கள் மாநாடு (COP14) குறிப்பிட்டுள்ளது.

- 1992 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், செயற்கை ஒளி உமிழ்வானது 49 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- இது வனவிலங்குகளின் நடத்தை மற்றும் உளவியல் மாற்றங்கள் உள்ளிட்ட மிகவும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும்.
- பறவைகள் தவிர, பாலூட்டிகள், ஊர்வன மற்றும் மீன் போன்ற பிற உயிரினங்களும் செயற்கை ஒளி உமிழ்வினால் பாதிக்கப்படக் கூடும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## Pi – தனிநபர் பயன்பாடு சார்ந்த செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள்





- இன்ஃப்லெக்சன் AI நிறுவனமானது, பயனருக்கு ஏற்ற ஒரு சூழல் கொண்ட Pi தனிநபர் பயன்பாட்டு உதவி அமைப்பு என்ற அதன் உரையாடு மென்பொருளினை இயக்கும் ஒரு பெரிய மொழி மாதிரியின் மேம்பட்ட வடிவமான இன்ஃப்லெக்சன் 2.5 என்ற அதன் சமீபத்திய மொழி மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இன்ஃப்லெக்சன் AI என்பது கலிபோர்னியாவில் அமைந்துள்ள டீப்மைன்ட் மற்றும் லிங்க்டுஇன் ஆகியவற்றின் முன்னாள் இணை நிறுவனர்களால் நிறுவப்பட்ட செயற்கை நுண்ணறிவு நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனம் ஆகும்.
- அவை 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில், Pi எனப்படும் அவற்றின் தனிப் பயன்பாட்டு செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளினை அறிமுகப்படுத்தின.

- Pi என்பது ஒரு செயற்கை நுண்ணறிவு நுட்பம் சார்ந்த உரையாடு மென்பொருள் ஆகும் என்ற நிலையில் இதனைப் பயன்படுத்தி ஒருவர் ஆழ்ந்த மற்றும் மிகவும் அர்த்தமுள்ள உரையாடல்களை மேற்கொள்ள முடியும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வாரிசுரிமை வரி: ஆக்ஸ்ஃபாம் அறிக்கை

- 70% நாடுகளில் செல்வ வளம் மீது எந்த விதமான வாரிசுரிமை வரியும் விதிக்கப் பட வில்லை என்று ஆக்ஸ்ஃபாம் அறிக்கை குறிப்பிடுகிறது.
- வாரிசுரிமை வரி என்பது ஒரு குறிப்பிட்ட சொத்தானது வாரிசுகளுக்கு பெயர் மாற்றப் படும் போது அதன் மீது விதிக்கப்படும் வரியினை குறிக்கும்.
- இறந்தவரின் உயில் அல்லது தன் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் ஒருவர் வாரிசு உரிமையினைப் பெற இயலும்.
- இது நேரடி வரியின் கீழ் வருகிறது.
- இந்தியாவில் வாரிசுரிமை வரி விதிப்பானது தற்போது நடைமுறையில் இல்லை.
- வாரிசுரிமை அல்லது சொத்துரிமை வரியானது 1985 ஆம் ஆண்டில் ரத்து செய்யப் பட்டது.
- மேலும், 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டமானது குறிப்பாக உயில் அல்லது வாரிசு உரிமையின் கீழ் சொத்துக்களைப் பெயர் மாற்றம் செய்வதை பரிசுகள் வரியின் வரம்பிலிருந்து விலக்குகிறது.




★★★★★★★★★★